

# அறிவுத் தோட்டம்!

(விழாநாள் 10-10-2023)

அறமெனத் தமிழைச் சூடி ஆசிரியப் பணியுமாகி,
திறமாக அறிவை வளர்க்கும் கலனை மனதிலேற்றி,
மறுவிலாச் சிந்தைகொண்டு, நூலகம் காணவிழைந்து,
அரியதாம் நூல்கள் பலவும் அதிலே சேகரித்து,

அறிவினைச் செய்தலாலே ஞானாலயா எனப்பெயரிட்டு,
அடுத்தொரு குழந்தையாக, நாற்பது ஆண்டு காலம்,
அணைத்தே வளர்த்து அனைவரும் பயனுறச் செய்து,
இனியதாம் மக்கள் தாமும் எளிதில் அறிந்து கொள்ள,

ஆவணப் படமாய் நூலகத்தின் சிறப்பு தன்னை செய்து,
யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் நிகழ்த்துகின்றார்!
மாவிலைத் தோரணமாய் மகுடம்சூடி நிறையும் பணி!
காவியமாய்ச் புதுக்கோட்டை - திருக்கோகரணம்

மேவிய சீர்பெருமை பெற்றே மகிழ்ந்திடச் செய்யும்,
என்னுடைய மாமா கிருஷ்ணமூர்த்தி மாமி டோரதி
இணையருக்கு, நாடிய நல்அன்பில் நிறைந்து,
வாழ்த்துகிறேன்! பொலிக எந்நாளும் நிறைந்து!

**அன்புடன்,**

**கு.பி.சுவாமிநாதன்,**
09-10-2023



(எழுத்தாக்கம்
**கு.ப.அசோகன்)**



